பற்றித் தனியாகக் கவனிக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று அவர்கள் அவ்வளவு குறைந்த எண்ணிக்கையில் இருப்பார்களானால் அதைப்பற்றிப் பரிசிலனை செய்வதில் தவறு இருக்காது.

குப்பல் திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்றவர்களும் மாதம் ஒன்றுக்கு மூன்று பேர்கள் இறந்து போகிறார்கள் என்று கணக்குச் சொல்கிறார்கள். அதிகமாக இதிலே காலதாமதம் செய்தால் அதிலே அநேகம் பேர்கள் இறந்துவிடுவார்கள். எனவே இதிலே காலதாமதம் செய்யாமல் உடனடியாகக் கொடுக்கச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிப்பட்ட முறையிலேதான் அது கவனிக்கப்படவேண்டுமென்று சொன்னேன். 1971-72 பார்ட் 'டீ' ஸ்கீமுக்குள் அதைப்பற்றி முடிவு எடுக்கவேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

பஞ்சாயத்துக்களுக்கு மானியம்.

*262 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரண்டாவது சம்பளக் கமிஷன் சிபாரிசுப் பிரகாரம் கூடுதல் சம்பளம் கொடுக்க வேண்டியதால் பஞ்சாயத்துக்களுக்கு ஏற்படும் நிதி பற்றாக்குறையை ஈடு செய்ய பஞ்சாயத்துக்களுக்கு அரசு மானியம் வழங்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தற்போது அமுலில் இருக்கும் விதிகளின்படியே பேரூராட்சி மன்றங்களில் அந்தந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையையோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுடன் முன்னுள் வழங்கப்பட்ட பஞ்சப்படி உட்பட கூடுதலாகும், செலவின மொத்தத் தொகையில் ஏது குறைவோ அதை ஈடு செய்ய பேரூராட்சி மன்றங்கள் அரசிடம் மான்யமாக பெற்று வருகின்றன.

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் சிரணி படிப்பகங்கள்.

*263 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் சிரணி அறிவகங்கள் (படிப்பகங்கள்) தற்போது எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது மாப்படுகைக் கிராமத்தில் ஒரு சிரணி அறிவகம் உள்ளது.

Collection of taxes by Village Officers

*264 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(a) whether village officers have been directed to collect taxes for the Panchayats; and

(b) if so, the details thereof?

1971 ஜூலை 16]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் அவ்வப்போது சேர வேண்டிய வரிகள், கட்டணங்கள் அனைத்தையும் கிராமத் தலைவர் வசூலிக்க வேண்டும். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்காக வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றை வசூலிப்பதற்கு வசதியாக இருப்பதற்காக, வரி விதிப்புப் பதிவேடு களையும், அவ்வப்போது வரையறுக்கப்படக்கூடிய பிற பதிவுகளையும், கிராமக் கர்ணம் எழுதி வைத்து வர வேண்டும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, ஊராட்சி வரிகளை பில் கலெக்டர்கள் மூலம் வசூல்செய்வது எஃபக்டிவ் ஆக இருக்கும் என்று அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அது இப்பொழுது தேவையில்லை என்று அரசு கருதித்தான் இப்பொழுது கர்ணம் போன்ற கிராம அதிகாரிகளால் வசூலிக்கவேண்டுமென்று அரசு உத்திரவிட்டு இருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து வரிகளை பஞ்சாயத்துக்களோடு கொஞ்சங்கூடத் தொடர்பில்லாத கிராம அதிகாரிகள் வசூல் செய்வதில் பலவகையான தவறுகள், குழப்பங்கள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தனி அதிகாரிகளை நியமித்து அந்த வரிகளை வசூல்செய்வதற்கு அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் குழப்பம் ஏற்படுவதாகத் தெரியவில்லை. கிராம அதிகாரிகள் வசூலிப்பதற்காக அவர்களுக்குத் தனியாகப் பணம் வேறு கொடுக்கிறோம். இடையிலே கிராம அதிகாரிகள் கொஞ்ச நாட்கள் வசூலிக்க மறுத்தார்கள். இப்பொழுது ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் இப்பொழுது சிரமம் இருக்காது என்று கருதுகிறேன்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய வரிகளை வசூலிக்கின்றபொழுது கிராம அதிகாரிகள் ஊராட்சி வரி, ஊராட்சி ஒன்றிய வரி, சர்சார்ஜ் என்று கேட்காமல் மொத்தமாக கந்தாயம் கொடு கந்தாயம் கொடு என்று கேட்டு வருகிறார்கள். அதனால் அரசு கந்தாயத்தை இன்னும் நீக்கவில்லை என்று பொதுமக்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஊராட்சி வரி, ஊராட்சி ஒன்றிய வரி, சர்சார்ஜ் என்று தனித்தனியாக அவர்கள் வசூல் செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி எங்காவது தவறு ஏற்பட்டிருந்தால் அதைப்பற்றித் தெரிவித்தால் கவனிக்கலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : பஞ்சாயத்து வரிகளை வசூலிக்கின்ற நேரத்தில் கிராம அதிகாரிகள் தயக்கம் காட்டுகின்ற காரணத்தால் சில மாவட்டங்களில் கிராம சேவக்குகள், சமூக நல ஊழியர்களை வைத்துப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைப் பிற மாவட்டங்களுக்கும் பயன்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒன்றிரு மாவட்டங்களில் கிராம சேவக்குகளை வைத்து வசூலித்தது உண்மை. ஆனால் அரசு மீண்டும் கிராம அதிகாரிகள்தான் வசூலிக்கவேண்டுமென்று உத்திரவு பிறப்பித்து இருக்கிறது.

[1971 ஜூலை 16

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஊராட்சி மன்ற வரிகளைக் கர்ணம் வசூலிக்க வேண்டுமென்ற அரசாங்க ஆணையையும் மீறி குளித்தலை வட்டத்திலே 200 கிராம கர்ணங்கள் வரி வசூலிக்காமல் இருக்கிறார்களே, அவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி அவர்கள் வசூலிக்க மறுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்னால் கிராம முன்சீப்கள், கர்ணங்கள் இந்த வரியை வசூலிக்கமுடியாது என்று சொல்லி விட்டார்கள். இப்பொழுது வசூலிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படி அடிக்கடி தகராறு செய்து வசூலிப்பதைவிட நான்கு பஞ்சாயத்துக்களுக்கு ஒன்றாக ஒரு வசூலிப்பவரைப் போட்டு வசூல்செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி எந்தத் தகராறும் இல்லை. இப்பொழுது வசூலிக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்னை எழவில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, the workload of the Karnams is being increased day by day due to collection of regular loans *plus* house tax and other things. Will the Government come forward to give more salary for the Karnams?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனியாக ஊராட்சி ஒன்றியப் பணம் வசூல்செய்வதற்குப் பணம் கொடுக்கப்படுகிறது என்று முதலிலேயே சொன்னேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் அந்த மாதிரி வசூலிப்பதற்கு முழு நேர ஊழியர்களாக ஆக்கி சம்பளம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்களா ? அதேமாதிரி கன்னியா குமரி மாவட்டத்திலே உள்ள கிராம அதிகாரிகள் முழு நேர ஊழியர்களாக இருக்கிறார்கள். அந்தமாதிரி தமிழகத்திலும் ஆக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கன்னியாகுமரி மாவட்டத்தில் இருப்பது முன்னாலே இருந்த திருவாங்கூர்-கொச்சின் முறையிலே இருப்பதாகும். ரயத்வாரி முறை இன்னும் அங்கே அமலில் வரவில்லை. தமிழ்நாட்டு முறை அங்கேயும் அமல் செய்யப்படும்.

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து வரி வசூல் செய்கின்ற கிராம அதிகாரிகள் நிலத்தீர்வை வசூல் செய்கிற—ஜனவரி மாதத்திலேதான்—மற்ற வரிகளையும் வசூல் செய்கிறார்கள். கால் ஆண்டு முடிந்து வசூல் செய்கின்ற வரி, அரையாண்டு முடிந்து வசூல் செய்யப்பட வேண்டிய சைக்கிள்வரி போன்றவைகள், இதனால் வசூல் செய்யப்படுவதில் கால தாமதம் ஏற்படுகிறது. ஆதலால் காலதாமதம் இல்லாமல் அவர்கள் முறைப்படி வசூல் செய்யவேண்டுமென்று அறிவுரை வழங்கி அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது ஒரு யோசனை. இதைப்பற்றிப் பரிசீலித்துச் செய்யலாம்.